மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் கையகப்படுத்தப்படுகின்றபோது, சில நேரங்களிலே தொழில்நுட்ப சாத்தியக் கூறுகளைப் பற்றியும் ஆய்வு செய்வார்கள். அந்த அளவிலே, தொழில்நுட்ப சாத்தியக் கூறுகளைப் பற்றி ஆய்வு செய்கின்றபோது, இடம் பள்ளமான பகுதியாக இருந்தால், தேர்வு செய்யப்பட்ட அந்தப் பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைப்பது சற்றுக் கடினம். இருந்தாலும்கூட, அந்தப் பகுதியில் அந்தப் பள்ளத்தை மேடு செய்வதற்கு எந்தளவுக்குச் செலவாகும் என்று மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நில மதிப்பீட்டுச் செலவைவிட அதிகமாக இருக்கிறது என்று சொன்னால், மாற்று இடம் கண்டறியப்பட்டு, புதிய துணை மின் நிலையம் அமைக்கப்படும்; அல்லது அந்த மதிப்பீட்டுத் தொகை குறைவாகவே இருந்தால், பள்ளமாக இருக்கும் அந்தப் பகுதியை மேடுபடுத்தி, நிலத்தைச் சீரமைத்து, அந்தப் பகுதியிலேயே துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

122—

மறுவாழ்வு மையம்

***20381—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு மாவட்டந்தோறும் மறுவாழ்வு மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அனைத்து மாவட்டங்களிலும் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு தொழிற்பயிற்சியுடன் கூடிய மறுவாழ்வு மையம் அமைக்கப்பட வேண்டும் என்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, சென்னை, கடலூர், இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், நாமக்கல், ஈரோடு, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மன வளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான 10 இல்லங்களும், சென்னை, திண்டுக்கல், கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, திருச்சி, திருநெல்வேலி, தேனி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் மன வளர்ச்சி குன்றிய பெண்களுக்கான 10 இல்லங்களும் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள மாவட்டங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று மன வளர்ச்சி குன்றியோருக்கான தொழிற்பயிற்சியுடன் கூடிய மறுவாழ்வு மையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேசமயத்தில், மன வளம் குன்றிய குழந்தைகளுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை என்பது நீண்டநாள் சிகிச்சையாக இருக்கின்ற காரணத்தினால், இந்த மறுவாழ்வு மையங்கள் ஒவ்வொன்றும் துவங்கப்படும்பொழுது பெற்றோர்களின் முழு அரவணைப்போடு அந்தக் குழந்தைகள் மறுவாழ்வு பெறுகின்ற வகையில், மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்கின்ற வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் குழந்தைகளுக்கான மருத்துவமனையை உள்ளடக்கிய ஒரு மறுவாழ்வு மையத்தை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

2013 ஏப்ரல் 2]

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளுக்காக ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் அரசு நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்மூலம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மருத்துவ வசதியோடு அவர்களுக்குப் பயிற்சியையும் தர வேண்டுமென்று 2 கோடியே 66 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இந்த மையங்களுக்கு குழந்தையுடன் துணையாக வரும் பெற்றோர்/பாதுகாவலர் ஒருவருக்கு அரசுப் பேருந்தில் பயணம் செய்யவும், பெற்றோர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் முழு சலுகையை வழங்கி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே கோயிலாக இருந்தாலும், சுற்றுலாத் தலமாக இருந்தாலும், பேருந்து நிலையமாக இருந்தாலும், எந்தவொரு கேளிக்கை அல்லது பொழுதுபோக்கு இடமாக இருந்தாலும், அங்கு பார்க்கின்ற இடங்களிலெல்லாம் பிச்சைக்காரர்கள் பிச்சையெடுக்கின்ற தொழில் மிக அருவருப்புத் தரக்கூடிய ஒரு நிலையிலே இருக்கிறது. எத்தனையோ நலத் திட்டங்களை தமிழ்நாட்டிலே நடைமுறைப்படுத்தினாலும், வெளிநாட்டிலே இருந்து வருகின்ற சுற்றுலா நண்பர்களாக இருந்தாலும், அல்லது உள்நாட்டிலே இருக்கிற யாராக இருந்தாலும், அந்தப் பிச்சைக்காரர்களைத்தான் முதலிலே அவர்கள் அந்த இடங்களிலே சந்திக்கிறார்கள். குறிப்பாக, முருகப் பெருமானுடைய கோயில்களிலே பிச்சை எடுக்கின்ற தொழில், கடவுளைத் தரிசிக்க செல்கின்ற வழியிலே, மிக அருவருக்கத்தக்க நிலையிலே இருக்கிறது.

[2013 ஏப்ரல் 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *ஆகவே, பிச்சை எடுக்கின்ற தொழிலை ஒழிப்பதற்கு அரசு நல்ல திட்டங்களைக் கொண்டு வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிச்சை எடுப்பவர்களை உடனடியாக தொண்டு நிறுவனங்களிடம் ஒப்படைத்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கடுமையாக நடவடிக்கை எடுத்து வருகிறது. அதுமட்டுமல்ல, அவர்களைத் தங்க வைப்பதற்கென்று திருவள்ளூர் மாவட்டம், மேல்பாக்கத்திலே ஒரு மிகப் பெரிய மறுவாழ்வு மையம் ஏற்படுத்தப்பட்டு, தற்போது 69 பேர் இதேபோன்று ஆலயங்களிலே, பொது இடங்களிலே பிச்சை எடுப்பவர்களைக் கண்டறிந்து, பிச்சை எடுப்பது தவறு என்பதை அவர்களுக்கு வலியுறுத்தி, மறுவாழ்வு மையங்களில் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்கு உணவு, உடை, பயிற்சி முதற்கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அளித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

123—

பொறியியல் கல்லூரி

***6869—திரு. எஸ். வேதாச்சலம்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—